**JUDICIAL MAGISTRATE COURT NO.I CHENGALPATTU**

**CC No. 401/2019**

**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
*****

| | |
|---|---|
| IN THE COURT OF | : JUDICIAL MAGISTRATE NO.I CHENGALPATTU. |
| Deposition of witness for | : PW- 5 |
| Name | : திரு. ராம்குமார் |
| Father/Husband's Name | : கே.ஆர். மூர்த்தி |
| Village | : வேம்புலியம்மன் கோயில் தெரு |
| Taluk | : பழவந்தாங்கல் |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : 34 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 21.05.2025.

Accused present.

**முதல் விசாரணை–**

நான் தற்போது பழவந்தாங்கலில் வசித்து வெப்டிசைனராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 09.03.2019 அன்று என்னுடன் பணிபுரியும் கோவிந்தராஜ் என்பவரின் திருமணத்திற்காக 09.03.2019 அன்று மதியம் 02.30 மணியளவில் போர்டு பிகோ காரில் சேலத்திற்கு 5 நபர்கள் சென்றோம். நாங்கள் அனைவரும் ஒரே டீமாக பணிபுரிகிறோம். மறுநாள் காலை திருமணத்தை பார்த்துவிட்டு 10.00 மணியளவில் சேலத்திலிருந்து கிளம்பி சென்னைக்கு அதே காரில் வந்து கொண்டிருந்த போது நான் அப்போது தூங்கி கொண்டிருந்தேன். திடீரென்று விபத்து ஏற்பட்டது. அப்போது நேரம் சரியாக நினைவில்லை செங்கல்பட்டு அருகில் விபத்து நடந்தது. என்னை அங்கிருந்து அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்தார்கள். எனக்கு லேசான காயங்கள் ஏற்பட்டிருந்தது. அன்றைய தினம் இரவு வரை சிகிச்சையிலிருந்து பின்னர் நண்பர்களுடன் சென்றுவிட்டேன்.

விபத்து எந்த இடத்தில் நடந்தது என்று சரியாக எனக்கு தெரியவில்லை.

செங்கல்பட்டு அருகில் என்பது மட்டும் தெரியும். அந்த காரினை ஆஜர் எதிரி ஆனந்த்சந்தர் தான் ஓட்டி வந்தார். காரில் மொத்தம் 5 நபர்கள் வந்தோம். அதில் எத்திராஜ் என்பவருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. காரில் முன் பகுதியில் அமர்ந்திருந்த சுஷ்மிதா இறந்துவிட்டார். மற்றவர்களுக்கு லேசான காயம் ஏற்பட்டிருந்தது. எதனால் எப்படி விபத்து ஏற்பட்டது என்று எனக்கு தெரியவில்லை நான் தூங்கி கொண்டிருந்தேன். நான் எப்போது தூங்க ஆரம்பித்தேன் என்று தெரியவில்லை ஆனால் தூங்கி கொண்டிருந்தேன். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரிக்கவில்லை. யாரால் எப்படி விபத்து ஏற்பட்டது என்பது தெரியாது.

**இந்த சாட்சியை பகுதியாக பிறழ்சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்பில் அனுமதி கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் திருமணத்தை முடித்து விட்டு சேலத்திலிருந்து 10.03.2019 அன்று திரும்பி வந்தேன் என்றால் சரிதான். செங்கல்பட்டு அல்தாஜ் ஓட்டல் எதிரே விபத்து நடந்தது என்று சொன்னால் எனக்கு எந்த இடம் என்று தெரியாது. விபத்து ஏற்படும் போது 02.30 இருக்கும் என்று சொன்னால் எனக்கு ஞாபகமில்லை. பின்னிட்டு சாட்சி தெரியவில்லை என்று கூறுகிறார். எதிரி சம்பவத்தின் போது என்னுடன் பணிபுரியும் உயர் அதிகாரியா என்றால் இல்லை என்னுடன் பணிபுரிபவர். எதிரி சடன் பிரேக் போட்டதால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியவில்லை நான் தூங்கி கொண்டிருந்தேன். கார் ஓட்டுனரின் கவன குறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று சொன்னால் எனக்கு தெரியாது. எதிரி எனது நண்பர் என்ற முறையில் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை–** இல்லை.

**மறுவிசாரணை–** இல்லை.

Sd.xxx

Typewritten to my dictation in open court read over to the witness in Tamil in the presence of the accused and admitted by the witness to be correct.

Sd.V.Lavanya,
Judicial Magistrate No.I,
Chengalpattu.